### மெட்ரோ ரெயிலில்

# போஸ்டர் ஒட்டினால் 6 மாத சிறை தண்டனை!

## 4 நிறுவனங்கள் மீது நடவடிக்கை!!

சென்னை,அக்.6–

மெட்ரோ ரெயிலில் போஸ்டர் ஒட்டுபவர்களுக்கு 6 மாத சிறை தண்டனைவழங்கப்படும் என்று மெட்ரோ நிர்வாகம் எச்சரித்துள்ளது.எப்படிவிதிமீறலில் ஈடுபட்ட 4நிறுவனங்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்கூறியிருப்பதாவது:மெட்ரோ ரெயில் திட்டத்தின், தடுப்புகள் மற்றும் பிற கட்டமைப்பு கள் மீதுசுவரொட்டிகள்போன்றவற்றை ஒட்டக் கூடாது.

மெட்ரோ ரெயில்வே சட்டம் 2002ன் படி, சட்டவிரோத செயலாகும். ரெயில் மீதோ, ரயில்வேயின் எந்த ஒரு கட்டமைப்பின்மீதோ, சுவரொட்டிகளை ஒட்டுபவர்களுக்கு 6 மாத காலம் வரைசிறைத்தண்டனையோ அல்லது சிறை தண்டனையுடன் சேர்த்து ரூ.1000 அபராதமோ விதிக்கப்படும். அல்லது இரண்டு தண்டனையும் வழங்கப்படும்.

### போலீஸ் நிலையங்களில் புகார்

விதிகளைமீறிவிளம்பரம் செய்த, மெகா கிரியேட்டிவ் ஏஜென்சி, பல்லாவரம் இந்தியன்பவர்ஜிம்,நவின்பிரஸ் உள்ளிட்ட 4 நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க போலீஸ் நிலையங்களில் புகார்அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.